# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1540 - 2008 මාර්තු 07 වැනි සිකුරාදා - 2008.03.07

*1540 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | – |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 196 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | – |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | – |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | – |
| அரசாங்க அறிவித்தல்கள் | 197 |
| விலைக் கட்டளைகள் | – |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | – |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | – |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | 198 |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 205 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | – |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | – |


**கவனிக்க** .– (i) பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதி (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதி (திருத்தம்) சட்டமூலம் 2008, சனவரி 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மாச்சு 14 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, பெப்புருவரி 29 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2008 இன் இல. 134*

*இல. டி/ஆர்எவ்/824/என்வை/04/04.*

**இலங்கை கடற்படை- நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரமாக்குதல்*

*2007, சனவரி 15 ஆந் திகதியிலிருந்து கொமதோர் (பொ) ஆக :*

*கப்ரின் (பொ) (தற்காலிக கொமதோர் (பொ) ஹேரத் முதியன்சேலாகே சோமதிலக்க எஸ்எல்என்- என்ஆர்ஈ 0275.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007, யூலை 23.*

*3-86*

---

*2008 இன் இல. 135*

*இல. டீ/ஆர்எவ்/824/என்வை/03/02.*

**இலங்கை கடற்படை- நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரமாக்குதல்*

*2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து கப்ரின் (பொ) ஆக :*

*கொமாண்டர் (பொ) (தற்காலிக கப்ரின் (பொ) அதிகாரி முதியன்சேலாகே ஜயந்த திலக்சிரி இகப - என்ஆர்ஈ 0548*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007, யூலை 23.*

*3-83*

---

*2008 இன் இல. 136*

*இல. டீ/ஆர்எவ்/824/என்வை/04/04.*

**இலங்கை கடற்படை- நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தரமாக்குதல்*

*2007 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக கப்ரின் ஆக:*

*கொமாண்டர் (ஏஎஸ்டப்) (தற்காலிக கப்ரின் (ஏஎஸ்டப்) நிராஜ பண்டுல ஸ்ரீபதி ஆடிகல, ஆர்எஸ்பி, பீஎஸ்சீ, இகப- என்ஆர்எக்ஸ் 0256.*

*கொமாண்டர் (ஏஎஸ்டப்) (தற்காலிக கப்ரின் (ஏஎஸ்டப்) சமரவீர முதலிகே தொன் கப்பில சமரவீர, ஆர்எஸ்பி, பீஎஸ்சி, இகப- என்ஆர்எக்ஸ் 0254.*

*கொமாண்டர் (சைகை) (தற்காலிக கப்ரின் (சைகை) அகலவத்த அசோக்க பிறின்ஸ்லி லியனகே, ஆர்எஸ்பி, பிஎஸ்சீ, இகப- என்ஆர்எக்ஸ் 0341.*

*கொமாண்டர் (ஏஎஸ்டப்) (தற்காலிக கப்ரின் (ஏஎஸ்டப்) பிறியங்க மெரில் விக்கிரமசிங்க, ஆர்டப்பி, ஆர்எஸ்பி, யூஎஸ்பீ, இகப - என்ஆர்எக்ஸ் 0260.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007, யூலை 23.*

*3-84*

---

*2008 இன் இல. 137*

*இல. டீ/22/என்வை/416.*

**இலங்கை கடற்படை- நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2007, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதியிலிருந்து இலங்கை கடற்படையின் நிரந்தரக் கடற்படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

*லெப்டினன்ட் கொமாண்டர் (வ) விஜேமுனி அருண சுஜவ் த சில்வா, என்ஆர்எஸ் 0424 இகப.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*கோடாபய ராஜபக்ஷ,*
*ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,*
*செயலாளர்,*
*பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,*
*சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.*

*கொழும்பு,*
*2007, ஒற்றோபர் 18.*

*3-85*

*2008 இன் இல. 138*

*டீ/ஆர்எவ்/824/என்வை/01/06*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு*

*2003, திசெம்பர் மாதம் 14 ஆந் திகதியிலிருந்து வைத்திய லெப்டினன்ட் கொமாண்டர் ஆக :*

வைத்திய லெப்டினன்ட் மாணிக்க பதுகே பிரபாத் சிந்தக்க விஜேதாஸ, என்ஆர்எம் 0851, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, நவெம்பர் 20.

3-157

*2008 இன் இல. 139*

*டீ/ஆர்எவ்/824/என்வை/01/06*

**இலங்கை கடற்படை - நிரந்தரக் கடற்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுகள்*

*2007, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதியிலிருந்து வைத்திய லெப்டினன்ட் கொமாண்டர் (பற்கள்) ஆக :*

வைத்திய லெப்டினன்ட் (பற்கள்) ஹேரத் முதியன்சேலாகே ஆரியவன்ச ஹேரத், என்ஆர்டீ 1616, இகப
வைத்திய லெப்டினன்ட் (பற்கள்) ரத்நாயக்க முதியன்சேலாகே ருவன் குமார சந்திரசிரி, என்ஆர்டீ 1617, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2007, திசெம்பர் 07.

3-158

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**சங்கங்கள் கட்டளைச் சட்டம்**

*(123 ஆம் அத்தியாயமான) சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆம், 4 ஆம் பிரிவுகளால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வியாபார, சந்தைப்படுத்துதல் அபிவிருத்தி, கூட்டுறவுகள் மற்றும் பாவனையாளர் சேவைகள் அமைச்சர் சுமித்ர ஆராச்சிகே டொன் பந்துல சந்திரசிரி குணவர்தன ஆகிய நான், கீழே கூறப்படும் நோக்கங்கள் தொடர்பில், இக்கட்டளைச் சட்டத்தின் மூலம் :-*

(1) 67பி, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்னும் முகவரியில் அமைந்துள்ள "மஹாஜன பெங்கு விஸ்ராமிக்க சங்கமய" எந்நோக்கங்களுக்காகத் தாபிக்கப் பட்டதோ அந்நோக்கங்களுக்குக் கட்டளைச் சட்டத்தின் தத்துவங்களும் வசதிகளும் நீடிக்கப்படுவதற்கு அதிகார மளிக்கின்றேன்.

(2) அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமையை மேற்படி சங்கத்திற்கு அக்கட்டளைச் சட்டத்தின் 5(4) ஆம் பிரிவின் ஏற்பாடு களிலிருந்து வரையறுக்கின்றேன்.

சுமித்ர ஆராச்சிகே டொன் பந்துல குணவர்தன (பா. உ.),
வியாபார, சந்தைப்படுத்துதல் அபிவிருத்தி,
கூட்டுறவுகள் மற்றும் பாவனையாளர்
சேவைகள் அமைச்சர்.

வியாபார,சந்தைப்படுத்துதல் அபிவிருத்தி,
கூட்டுறவுகள் மற்றும் பாவனையாளர்
சேவைகள் அமைச்சு,
இல. 33, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02,
2008, பெப்புருவரி 12.

3- 56

**புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டம்**

*16 ஆம் பிரிவின்கீழ் அமைந்துள்ள கட்டளை*

*புராதன பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் (188 ஆம் அத்தியாயம்) கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு தேசிய மரபுரிமை பதில் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகிய நான், அதற்கான அட்டவணையில் விபரிக்கப்படும் நினைவுச் சின்னங்கள் மேற்கூறப்பட்ட நினைவுச் சின்னங்களாக கருதப்படுகின்றன என இக்கட்டளையால் வெளிப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த யாப்பா அபேவர்தன,*
*தேசிய மரபுரிமை பதில் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2008, பெப்புருவரி 12.*

**அட்டவணை**

*(1) கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் உட்பூரல் கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சீனத்வெளிக் கிராமத்தில் லங்காபட்டுன சமுத்ரகிரி விஹாரை வளவுகளில் உள்ள புராதன தாகபை, சிதைந்த புராதன தடாகம், புராதன நீல் உருண்டை வடிவமுள்ளவையும் நீள்சதுர வடிவமுள்ளவையுமான உடைந்த கற்கள் மற்றும் பணாபாமி.*

*(2) கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் அணைத்தீவு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள கல்லடி பாஷனபப்பாத்த விகாரை வளவுகளில் உள்ள சிதைந்த தாகபை, ஆறு கல் வெட்டுகள், கல்லில் செதுக்கப்பட்ட புராதன படிக்கட்டுகள் மற்றும் பணாபாமி.*

*3-49*

# வரவு செலவுத் திரட்டுக்கள்

**மனிதவள மேம்பாட்டு நிறுவனம்**

கொழும்பு பல்கலைக்கழகம்

**2006, திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை**

| | சொத்துக்கள் | குறிப்பு | 2005 | | 2006 | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **நடைமுறைச் சொத்தல்லாதவை :** | | | | | | |
| (அ) | காணியும் கட்டடங்களும் | | 1,417,737 | | 1,946,851 | |
| (ஆ) | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | (அட்.பீ-01) | 2,915,675 | | 4,767,644 | |
| (இ) | நூலகப் புத்தகங்களும் பருவ இதழ்களும் | (அட்.பீ-02) | 553,552 | | 692,514 | |
| (ஈ) | மோட்டார் வாகனங்கள் | | 67,070 | | 38,258 | |
| (உ) | கட்டட, புனர்நிர்மாண, பராமரிப்பு | | 441,177 | 5,395,211 | 61,689 | 7,506,956 |
| | | | | 7,511,466 | | 6,043,993 |
| **முதலீடுகள் :** | | | | | | |
| | **நடைமுறைச் சொத்தக்கள்:** | | | | | |
| (அ) | இருப்புக்கள், சேமிப்பு | (அட்.பீ-03) | 377,033 | | 384,936 | |
| (ஆ) | உத்தியோகத்தர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | (அட்.பீ-04) | 3,123,881 | | 3,404,239 | |
| (இ) | நானாவித முற்பணங்கள் | (அட்.பீ-05) | 224,838 | | 255,444 | |
| (ஈ) | மீள் கொடுப்பனவுகள் | (அட்.பீ-06) | 43,789 | | 71,836 | |
| (உ) | மேலதிகக் கொடுப்பனவுகள் | (அட்.பீ-07) | 41,886 | | 23,111 | |
| (ஊ) | தகுந்த வரிக் கட்டணங்களுக்கான முதல்நிலை செலவுகள் | (அட்.பீ-08) | | | 192,861 | |
| (எ) | ஏனையவை | (அட்.பீ-09) | 282,880 | | 576,686 | |
| (ஏ) | பணம் மற்றும் பணப்பெறுமதி | (அட்.பீ-10) | 1,656,195 | 5,750,502 | 1,307,184 | 6,216,297 |
| | | | | 18,657,179 | | 19,767,246 |

| சொத்துக்கள் | | குறிப்பு | 2005 | | 2006 | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **மொத்தச் சொத்துக்கள் :** | | | | | | |
| பங்குகள், பொறுப்புக்கள் - மூலதனம் : | | | | | | |
| (அ) | செலவழித்த மூலதன மானியம் | | 17,038,538 | | 18,432,043 | |
| (ஆ) | செலவழிக்கப்படாத மூலதன மானியம் | (அட்.பீ-11) | 406,806 | | 413,301 | |
| (இ) | பரிசில்களும் நன்கொடைகளும் | | 349,465 | | 351,440 | |
| (ஈ) | மூலதனத்திலிருந்து பங்கு | | | | | |
| | I வருமானம் மற்றும் பொது ஒதுக்கம் | | 160,373 | | 160,373 | |
| | II குறுகியகால பாடநெறி வருமானம் | | 3,741,317 | | 3,962,182 | |
| | III தொ.க.நி. அபிவிருத்தி நிதியம் | | 479,551 | | 996,830 | |
| | IV த.தொ.நு IT நிதியம் | | 500,000 | 22,676,050 | 1,899,087 | 26,215,256 |
| **திரட்டப்பட்ட நிதியம் :** | | | | | | |
| | பொது ஒதுக்கம் | (அட்.பீ-12) | (17,669,419) | | (21,449,954) | |
| | வருமான செலவினக் கணக்கு | | (3,844,514) | (21,513,933) | (1,531,739) | (22,981,693) |
| | முன்கொண்டுசெல்லப்பட்ட மீதி | | | 1,162,117 | | 3,233,563 |
| | முன்கொண்டுவரப்பட்ட மீதி | | 1,162,117 | | | 3,233,563 |
| **ஒதுக்கங்கள், மட்டுப்படுத்தப்பட்ட நிதியம் :** | | | | | | |
| (அ) | பண பரிசில்கள் கொடுப்பதற்கான நிதியம் | | 46,000 | | 8,500 | |
| (ஆ) | வெகுமதி நிதியம் | | 9,000 | | 9,000 | |
| (இ) | தொ.க.நி. அபிவிருத்தி நிதியம் | (அட்.பீ-13) | 753,642 | | 832,897 | |
| (ஈ) | கட்டடநிதியம் | | 1,502,125 | | 20,000 | |
| (உ) | த.தொ.நு. நிதியம் | | - | | 912 | |
| (ஊ) | ஏனையவை கற்கைவரி கட்டணம் | (அட்.பீ-14) | 8,075,051 | | 1,075,917 | |
| (எ) | கற்கைவரி கட்டணங்கள் - கடன் மீதி | (அட்பீ-15) | - | 10,385,818 | (59,682) | 1,887,544 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை | | | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | | | | 4,985,308 | | 6,944,697 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் :** | | | | | | |
| (அ) | கொடுப்பனவுகளுக்கான எற்பாடுகள் | (அட்.பீ-16) | 1,182,042 | | 5,754,267 | |
| (ஆ) | அட்டுறு செலவுகள் | (அட்.பீ-17) | 216,832 | | 196,231 | |
| (இ) | வைப்புக்கள் - மீளளிக்கத்தக்க | (அட்.பீ-18) | 626,878 | | 960,180 | |
| (ஈ) | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் வைப்புக்கள் | (அட்.பீ-19) | 19,380 | | 34,385 | |
| (உ) | கணக்காய்வுக்கான கட்டண ஏற்பாடுகள் | (அட்.பீ-20) | 65,000 | | 130,000 | |
| (ஊ) | இனங்காணப்படாத கடன்கொடுத்தோர் | | | | 625,050 | |
| (எ) | ஏனையவை | (அட்.பீ-21) | 13,804 | 2,123,936 | 1,329 | 7,701,442 |
| | மொத்தப் பொறுப்புக்கள் | | | 18,657,179 | | 19,767,246 |

சரியென அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

கலாநிதி டப். கே. கிரிகும்புறேகம,
இயக்குநர்.

என். விஜயவர்தன,
பிரதி நிதியாளர்.

## மனிதவள மேம்பாட்டு நிறுவனம்

கொழும்பு பல்கலைக்கழகம்

### 2006, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு

(பெறுமானங்கள் கிட்டிய ரூபாவுக்கு செம்மையாக்கப்பட்டுள்ளது)

| வருமானம் | | குறிப்பு | 2005 | | 2006 | |
|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ***1. அரச மானியம் :*** | | | | | | |
| (அ) | மீண்டுவரும் செலவினங்களுக்கான அரச மானியம் | | 11,800,000 | 15,480,000 | | |
| (ஆ) | புனர்நிர்மாண மூலதன சொத்துக்களுக்கான அரச மானியங்கள் | | - | | | |
| (இ) | மகாபொல புலமைப் பரிசில் மானியம் | | 373,100 | | | |
| (ஈ) | பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து சம்பள நிலுவைகளுக்கான மானியம் | | - | 12,173,100 | | |
| (உ) | தொ.க.நி. கட்டட நிதியிலிருந்து எடுக்கப்பட்ட நிதியங்கள் | | - | | 1,770,335 | 17,250,335 |

| | குறிப்பு | 2005 | | 2006 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2. பதிவுக் கட்டணங்கள் | | 300,500 | | 358,500 | |
| 3. மாணவர் கட்டணங்கள் | | - | | 157,680 | |
| 4. கணனிக் கற்கை கட்டணங்கள் | | 27,300 | | 17,740 | |
| 5. பரீட்சைகள் கட்டணம் | | 37,555 | | 21,675 | |
| 6. கடன்கள் மற்றும் முற்பணங்கள் வட்டி | | 114,541 | | 126,250 | |
| 7. முதலீடுகள் மீதான வட்டி | | 212,621 | | 365,529 | |
| 8. பழைய சரக்குகள் விற்பனை | | 1,476 | | 4,839 | |
| 9. வெளியீடுகள் விற்பனை | | 1,150 | | 500 | |
| 10. நூலகத் தண்டப்பணம் | | 4,982 | | 7,142 | |
| 11. துணைநிலைச் செயற்பாடுகள் | | 14,472 | | 6,928 | |
| 12. நானாவித வருமானங்கள் | (அட்பீ.-01) | 192,197 | | 350,982 | |
| 13. செயலமர்வுகள் வருமானம் | (அட்.பீ-02) | - | | 14,589 | |
| 14. கழிக்கப்பட்ட பொருட்களிலிருந்து கிடைக்கப்பட்ட இலாபம் | | 1,133 | | - | |
| 15. ஆணைகள் சுற்றறிக்கை: 850 வரவுகள் கணக்கு | | - | | | |
| 16. பட்டதாரிகள் ஆடைகள் வாடகை | | 66,850 | | 73,125 | |
| 17. குறுகியகால கற்கைநெறி வரவுகள் கணக்கு | (அட்.பீ-03) | 11,205,187 | 12,179,964 | 17,467,609 | 18,973,088 |
| கொண்டுசெல்லப்பட்ட மீதி | | | 24,353,064 | | 36,223,423 |
| கொண்டுவரப்பட்ட மீதி | | | 24,353,064 | | 36,223,423 |
| **செலவினங்கள்:** | | | | | |
| 1 தனிப்பிட்ட வருமானங்கள் | (அட்.பீ-04) | | | | |
| சம்பளங்கள், கூலிகள் | | 6,072,051 | | 10,493,372 | |
| யூபிஎவ்/ஈபிஎவ்/ஓய்வூதியம் | | 1,148,656 | | 1,841,736 | |
| தள்ளுபடி | | 2,948,128 | | 1,145,055 | |
| மேலதிக/விடுமுறை கொடுப்பனவுகள் | | 594,836 | | 1,042,926 | |
| வந்துபோகும் விரிவுரையாளர் கட்டணம் | | 941,793 | | 1,087,037 | |
| 2 பிரமாணம் | | 28,882 | | 8,691 | |
| 3 வழங்கல்கள் | | 699.190 | | 691,376 | |
| 4 பராமரிப்பு | | 329,147 | | 291,078 | |
| 5 ஒப்பந்த சேவைகள் | | 1,280,866 | | 1,433,436 | |
| 6 ஆராய்ச்சி | | - | | - | |
| 7 ஏனையவை | | 690,787 | | 702,196 | |
| 8 மகாபொல புலமைப்பரிசில்கள் | | 373,100 | | - | |
| 9 தேய்மானம் | (அட்.பீ-06) | 1,484,218 | | 1,540,390 | |
| 10. பணிக்கொடைக்கான செலவினங்கள் | | 1,419,281 | | 1,959,389 | |
| 11 நீடிப்பு கற்கைகளுக்கான செலவினங்கள் | (அட்.பீ-05 | 10,016,972 | | 15,518,480 | |
| 12 கற்கைவரி கட்டணங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட முற்பணம் | | 169,672 | 28,197,579 | - | 37,755,162 |
| வரவிலும் மிஞ்சிய செலவு | | | (3,844,515) | | (1,531,739) |

**வருமானச் செலவுப் பகிர்வுக் கணக்கு :**

| | | |
|---|---|---|
| வருமானச் செலவுக் கணக்கிலிருந்து கொண்டுவரப்பட்ட மீதி | (3,844,515) | (1,531,739) |
| வருமானச் செலவுக் கணக்கு மீதி | (17,055,210) | (21,513,932) |
| கடந்த கால ஆண்டுகளுக்கான சீராக்கங்கள் | (614,208) | 63,978 |
| ஐந்தொகைக்கு கொண்டு செல்லப்பட்ட மீதி | (21,513,933) | (22,981,693) |

**நிதிக் கூற்றுக்கள் மீதான குறிப்புகள்**

1. **பொதுக் கணக்கீடுகள் கொள்கைகள் :**

1.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகவும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகித்தும் வரலாற்று அடிப்படையிலும் இந்நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1.2 எல்லாப் பொறுப்புக்களுக்குமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

1.3 காசு அடிப்படையில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் சம்பந்தமான வருமானம் மற்றும் செலவினம் கணக்கிடப்பட்டிருக்கின்றது. நிகழ்ச்சித் திட்டத்தின் செலவினத்திற்கான சமமான வருமானமானது நிதிக் காலப் பகுதியில் வருமானச் செலவினக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. பொறுப்புக்களின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் மிகுதி நிகழ்ச்சித்திட்டத்தின் வருமானமானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1.4 பாதீட்டுக் காலத்தின் இறுதிப் பகுதியில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் வருமானமானது கண்டறியப்படும்.

2. **சொத்துக்களும் அவற்றின் பெறுமதி மதிப்பீட்டு அடிப்படைகளும் :**

2.1 தேய்மானத்தைக் கொண்ட சொத்துக்களுக்கான தேய்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் பேரேட்டு மீதியில் பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

2.2 திரண்ட பெறுமானத் தேய்வைக் கழித்து வரும் கிரயத்தில் நிலையான சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளன. ஒரு பொருளின் உபயோக காலத்தைப் பொறுத்து அவற்றின் தேய்மானப் பெறுமதியை வருடத்திற்குரிய வீதமாக கீழ்வருமாறு கணிப்பீடு செய்யப்படுகிறது :-

| | |
|---|---|
| கட்டடங்கள், நிர்மாணங்கள் | 5% |
| தளபாடங்கள், உபகரணங்கள் | 10%/ 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| கணனிகள் | 20% |
| நூலகப் புத்தகங்களும் பருவ இதழ்களும் | 20% |
| ஏனைய சொத்துக்கள் | 10%/ 20% |

2.3 இருப்புக்கள் பேரேட்டு மீதிகள் கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

3. **பொறுப்புக்கள் மற்றும் கொடுப்பனவுகள் :**

நிறுவனத்தின் எல்லா பணியணியினருக்குமான ஓய்வுபெறும் உபகாரக் கொடுப்பனவு முழுக் கொடுப்பனவாக கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக் கொடுப்பனவானது நிதியத்திற்குச் சமமான கொடுப்பனவாக பிரதிநிதித்துவப்படமாட்டாது. திறைசேரியின் மானியத்திலிருந்து இதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பணிப்பாளர்,
கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டு நிறுவகம்.

**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2006 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைகழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவு ஆகியவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2006 திசெம்பர் 31 இல்' முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டமாக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க மனிதவள மேம்பாட்டு நிறுவக கட்டளைச் சட்டத்தின் கைநூலின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகரச் சட்டத்தின் 108 (1) மற்றும் 111 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3), (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளாகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவு மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்படுகிறது.

*1.2* ***கணக்காய்வின் நோக்கெல்லை :***

*இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர் , ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கு அமைய, மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அவற்றின் ஒட்டு மொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப் பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.*

*2.* ***நிதிக்கூற்றுக்கள்***

*2.1* ***அபிப்பிராயம் :***

*எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தில் 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவெடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர சொல்லப்பட்ட பதிவேடுகளுக்கு இணங்கவும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகள் (பீ - 1 முதல் பீ - 21 மற்றும் 1 முதல் பி - 6 வரை) மற்றும் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் அமைய கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2006 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.*

*2.2* ***நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள் :***

*2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள் :*

*சுய நிதியீட்டல் பாடநெறிகள் கணக்கிற்கு 2006 ஆம் ஆண்டின்போது வங்கியால் செலவுவைக்கப்பட்டிருந்த 626,050 ரூபா இனங்காணப்பட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது அந் நிதி இனங்காணப்படாத பொறுப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.*

*2.2.2 பெறவேண்டிய கணக்குகள் :*

*பல்வேறு முற்பணக் கணக்குகளின் கீழ் 10 ஆண்டுகளுக்கு மேல் பழமையாக தீர்க்கப்படாதிருந்த 226,741 ரூபா தொகையான முற்பணங்களும் காணப்பட்டது.*

*2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை :*

*சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள் பின்வருமாறாகும் :-*

| *சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு* | *இணங்காமைகள்* |
|---|---|
| *(அ) 2005 ஏப்பிறல் 26 ஆந் திகதிய 861 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை* | (i) *24 ஆம் இலக்க ஆங்கில மொழிச் சான்றிதழ் பாட நெறியின் இறுதிப் பரீட்சையின், பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்ட 58 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படக்கூடிய கட்டணமான 25,925 ரூபா இற்குப் பதிலாக 186,350 ரூபா செலுத்தப்பட்டிருந்தமையால் 160,425 ரூபா மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.* |
| | (ii) *24 ஆம் 25 ஆம் இலக்க ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி மற்றும் 2 ஆம் 3 ஆம் இலக்க ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழி சான்றிதழ் பாடநெறி தொடர்பான பரீட்சை நடவடிக்கைகளுக்காக சுற்றறிக்* |

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| | கைக்கு முரணாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பாக நிறுவனத் தலைவரின் பதில் பின்வருமாறாகக் காணப்பட்டது. இச் சகல பரீட்சைகளும் வார இறுதி விடுமுறை நாட்களிலேயே நடாத்தப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கை இல. 861 இன் பிரகாரம் சகல உத்தியோகத்தர்களுக்கும் உரிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிகக் கொடுப்பனவு அல்லது விடுமுறைக் கொடுப்பனவிற்கு உரித்துள்ளது. இச்சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கட்டண அளவு உழைத்த தொகையிலிருந்து செலுத்தப்படுவதற்கு நிறுவகத்தின் கல்விசார்குழு அங்கீகரித் துள்ளது. |
| (ஆ) நிதிப் பிரமாணம்<br>(i) நி. பி. 756<br>(ii) நி. பி.880 | 2002 ஆம் ஆண்டின் பின்னர் 2,996,022 ரூபா தொகையான நூலகப் புத்தகங்கள் மற்றும் வார வெளியீடுகள் தொடர்பாக ஆய்வு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>நிதிப் பொறுப்பாளராகக் கடமையாற்றும் உத்தியோகத்தரிடமிருந்து பிணைப்பணம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை |

2.2.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் :

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன :-

(அ) 1994, யூன் 14 ஆந் திகதி 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கைக்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டாம் மற்றும் மூன்றாம் மொழித் தேர்ச்சிக்கான சம்பளம் மற்றும் படிப்பணமாக 2006 ஆம் ஆண்டின்போது 126,124 ரூபா செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1994, யூன் 14 ஆந் திகதி 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கைக்கு முரணாக நீண்டகாலச் சேவைக் கொடுப்பனவாக 10,000 ரூபாவும் ஓர் உத்தியோகத்தருக்கு மதிப்பூதிய தொகையாக 18,000 ரூபா உம், ஆங்கில சான்றிதழ் பாடநெறி இல. 24 இற்காக உத்தியோத்தர்களின் ஊக்குவிப்புப் படியாக 200,350 ரூபா உம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் தொழிற் கல்வியியல் பட்டப் பாடநெறிக்கான மாணவர்களைச் சேர்ப்பது தொடர்பான ஆய்வுச் சபைக்கு அரச விடுமுறை நாட்களில் வெளியேயிருந்து வருகை தந்த உத்தியோகத்தர்கள் ஆறு பேருக்கு 27,500 ரூபா உம், இதிற் கலந்துகொண்ட நிறுவக உத்தியோகத்தர்கள் எட்டுப்பேருக்கு 38,500 ரூபா உம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு :

### 3.1 நிதி விளைவுகள் :

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி, நிறுவகத்தின் 2006 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நடவடிக்கைகளின் தொழிற்பாடு, மீண்டெழும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கில் எடுத்தக் கொள்வதன் முன்னர் 17,011,739 ரூபா பற்றாக்குறையை விளைவித்து, இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை 15,644,515 ரூபா ஆகும். மீண்டெழும் செலவிற்கான 15,480,000 தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை 1,531,739 ரூபா ஆகக் குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவிற்காக பெறப்பட்ட 11,800,000 ரூபா தொகையான அரசாங்க மானியத்தின் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை 3,844,515 ரூபாவாகக் குறைவடைந்திருந்தது.

### 3.2 செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன:-

(அ) நிறுவகத்தினால் நடாத்தப்படும் பிரதான பட்டப் பாடநெறியான தொழிற் கல்விசார் பட்டப் பாடநெறிக்காக 2006 ஆம் ஆண்டின்போது பதிவாகிய மாணவர்களின் எண்ணிக்கை 712 ஆன அதேவேளை இது முன்னைய ஆண்டினைப்பார்க்கிலும் 88 மாணவர்களால் அதிகரிப்பைக் காண்பித்தது. 2006 ஆம் ஆண்டின்போது நடாத்தப்பட்ட

பரீட்சைகளில் ஒரு பரீட்சைப் பெறுபேற்றைத் தவிர ஏனைய பரீட்சைகளின் பெறுபேறு 3 மாதகாலம் கடந்திருந்த போதிலும் வெளியாகியிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டின்போது பணம் அறவிடும் பாடநெறிகள் 5 நடாத்தபட்டிருந்ததுடன் இதற்காகக் கலந்துகொண்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 2,778 ஆகும். பரீட்சைக்குத் தோற்றியிராத மாணவர்களின் எண்ணிக்கை 187 ஆன அதேவேளை இது மொத்த மாணவர் எண்ணிக்கையின் 7 சதவீதமாகும். சித்தியெய்தியிராத மாணவர்களின் எண்ணிக்கை 132 ஆன அதேவேளை இது மொத்த மாணவர் எண்ணிக்கையின் 5 சதவீதமாகும்.

(இ) பணம் அறவிடப்படும் பாடநெறிக் கட்டணமாக 10,355,000 ரூபா தொகை 2006 ஆம் ஆண்டின்போது பெறப்பட்டிருந்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4 சதவீதம் குறைவைக் காண்பித்தது.

(ஈ) தொழிற் கல்வியியல் பட்டப் படநெறிக்காக 2006 ஆம் ஆண்டின்பொது ஒதுக்கப்பட்ட மணித்தியால எண்ணிக்கை 3,075 ஆனதுடன் நடாத்தப்பட்ட மொத்த விரிவுரை மணித்தியாலங்கள் 2,810 ஆகும். இது 91 சதவீதமாகும். நடாத்தப்பட்ட விரிவுரை மத்தியாலங்களில் 445 மணித்தியாலங்கள் நிறுவகத்தின் உள்ளக விரிவுரையாளர்கள் இருவராலும் 2,365 மணித்தியாலங்கள் வருகைதரு விரிவுரையாளர்களாலும் நடாத்தப்பட்டது. இதன் பிரகாரம் மொத்த விரிவுரை மணித்தியாலங்களில் உள்ளக விரிவுரையாளர்களால் நடாத்தப்பட்டிருந்த விரிவுரை மணித்தியாலங்கள் 16 சதவீதமாகும். இவ்வாறே வருகைதரும் விரிவுரையாளர்களுக்காக செலவிடப்பட்ட மொத்தக் கிரயம் 1,060,856 ஆனதுடன் ஒரு வருகைதரு விரிவுரை மணித்தியாலத்தின் சராசரிக் கிரயம் 449 ரூபா ஆகும்.

(உ) போதை பொருள் ஒழிப்பு டிப்ளோமா கற்கைநெறியின் 2 ஆம் 3 ஆம் இலக்கத்திற்குரிய விரிவுரையாளர்களுக்கு நியமனம் வழங்கப்படுகையில் ஆகக்கூடியது 50 மணித்தியாலங்கள் விரிவுரை மணித்தியாலங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் ஆகக் குறைந்தது 13 மணித்தியாலங்களேனும் விரிவுரை நடாத்தப்படவேண்டியிருந்தது. இப் பாடநெறிக்காக கற்கைநேர அட்டவணை ஒன்று பயன்படுத்தப்பட்டிராததுடன் எவ் விரிவுரையாளர்களுக்கும் குறித்த விரிவுரை நேர அளவு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே இப் பாடநெறியில் வருகைதரு விரிவுரையாளர்கள் 13 பேரில் ஒரு விரிவுரையாளர் தவிர்ந்த மற்றைய விரிவுரையாளர்களால் 50 மணித்தியால விரிவுரைகள் நடாத்தபட்டிராததுடன் 13 மணித்தியாலங்களிலும் குறைவாக விரிவுரைகளை நடாத்திய விரிவுரையாளர்களில் மூவர் அடங்கியிருந்தனர்.

### 3.3 முறையற்ற கொடுப்பனவுகள் :

ஆங்கில சான்றிதழ் பாடநெறிக்கு உரிய பாடத்திட்டத் தயாரிப்பு மற்றும் திருத்தத்திற்காக 154,500 ரூபா செலவிடப்பட்டிருந்தபோதிலும் அக் கொடுப்பனவிற்குரிய பாடத்திட்டத்திற்கும் முன்னர் அவ் ஒருங்கிணைப்பாளரால் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கும் இடையே கருத்திற்கொள்ளப்படவேண்டிய பாரிய வேறுபாடோ அல்லது திருத்தங்களோ செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பாதீட்டுக் கட்டுப்பாடு :

2006 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட சில விடயங்களுக்காக மதிப்பிடப்பட்ட செலவினம்/வருமானம் மற்றும் உள்ளபடியான செலவினம்/வருமானத்திற்கும் இடையே கருத்திற்கொள்ளவேண்டிய முரண்பாடு காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும் :

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்து :-

(அ) முற்பணங்கள்
(ஆ) பாடநெறி விரிவுரை மணித்தியாலம்
(இ) பாடநெறி நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவு

பீ. ஏ. பேமதிலக,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

"ஓ. எஸ். பிரஷ் சைன் (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1999.08.27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஓ. எஸ். பிரஷ் சைன் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "ஓ. எஸ். பிரஷ் சைன் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டீ. கே. ஹெட்டியாரச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

என். (பீவீஎஸ்) 24407.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
2008, பெப்புருவரி 14.

3-08

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

"தர்சின் சன்ஸ் லிமிட்டெட் " ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (பிரிவு 145) ஏற்பாடுகளுக்கமைய 1977.04.22 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "தர்சின் சன்ஸ் லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "தர்சின் சன்ஸ் லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவல கத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டீ. கே. ஹெட்டியாரச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பிவிஎஸ் 4702.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
2008, பெப்புருவரி 13.

3-09

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்

"கொழும்பு ட்ரான்ஸ்சிப்மன்ட் என்ட் ட்ரேடிங் லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (பிரிவு 145) ஏற்பாடுகளுக்கமைய 1978.10.20 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "கொழும்பு ட்ரான்ஸ்சிப்மன்ட் என்ட் ட்ரேடிங் லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் "கொழும்பு ட்ரான்ஸ்சிப்மன்ட் என்ட் ட்ரேடிங் லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டீ. கே. ஹெட்டியாரச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

பிவிஎஸ் 5328.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
2008, பெப்புருவரி 13.

3-11

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்**

*"யுஅன் மெங் சைனீஸ் ரெஸ்ட்டூரன்ட் (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 394 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (பிரிவு 145) ஏற்பாடுகளுக்கமைய 2007.12.07 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "யுஅன் மெங் சைனீஸ் ரெஸ்ட்டூரன்ட் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்ப முடிகிறது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 394 (3) ஆம் பிரிவின் கீழ், கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி டயஸ் கருணாரட்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான், இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "யுஅன் மெங் சைனீஸ் ரெஸ்ட்டூரன்ட் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகிறேன்.

டீ. கே. ஹெட்டியாரச்சி,
கம்பனிகள் பதிவாளர் மா அதிபதி.

என் (பிவிஎஸ்) 27525.
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர"
400, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
2008, பெப்புருவரி 12.

3-12

---

**சபரகமுவ அபிவிருத்தி வங்கி**

*1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 43 ஆவது சரத்தின் மூலமாக வலுவாக்கப்பட்ட வங்கிகளினால் அளிக்கப்பட்ட கடன்களை மீளப்பெறுவதற்கான 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க (விசேட ஒழுங்குகள்) சட்டத்தின் 04 ஆம் சரத்துக்கு அமைவாக தீர்மானம் நிறைவேற்றுதல்*

1997 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 43 ஆவது சரத்தின் மூலமாக வலுவாக்கப்பட்ட வங்கிகளினால் அளிக்கப்பட்ட கடன்களை மீளப்பெறுவதற்கான 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, (விசேட ஒழுங்குகள்) சட்டத்தின் 04 ஆவது சரத்துக்கு அமைவாக சபரகமுவ அபிவிருத்தி வங்கியின் நிர்வாகக் குழுவினால் 26.01.2007 ஆந் திகதி இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

"சபரகமுவ அபிவிருத்தி வங்கியின் சார்பாக இரத்தினபுரியைச் சேர்ந்த வழக்கறிஞரும் பிரசித்த நொத்தாரிசுமான டபிள்யூ. ஏ. டி. கே. வீரசிங்க அவர்களினால் 15.11.2005 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 469 ஆம் இலக்க அடகு உறுதி பத்திரத்தின்படி செலுத்தவேண்டிய தொகையை வட்டாபொத்த, கிரிபத்கல, பாடசாலை அருகில் எனும் விலாசத்தில் வசிக்கும் கலப்பு தந்திரிகே தொன் நிஹால் திஸ்ஸ/கலப்பு தந்திரிகே தொன் திஸ்ஸ பண்டார என்பவர்கள் செலுத்தத் தவறியுள்ளதால், மேற்கூறப்பட்ட உறுதி பத்திரத்தின்படி சபரகமுவ அபிவிருத்தி வங்கிக்கு செலுத்தப்பட வுள்ள இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து தொளாயிரத்து முப்பத்தி ஏழு ரூபா இருபத்தொரு சதமும் (ரூ. 2,40,937.21) 07.12.2006 ஆந் திகதி முதல் ஏலமிடும் திகதி வரையிலும் 22% வட்டியாக இரண்டு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து எண்நூற்றி ஜம்பத்தேழு ரூபாவும் ஜம்பத்திரண்டு சதமும் (ரூ. 2,33,857.52) அதோடு விற்பனை வரி, பாதுகாப்பு வரி, மற்றும் ஏலம் விடும் செலவு இதர செலவுகள் அனைத்தையும் சேர்த்து இக்காலத்திற்குள் ஏதேனும் கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்றிருப்பின் அவற்றை கழித்தப்பின் மிகுதியை மீளப்பெறும் பொருட்டு மேற்கூறப்பட்டுள்ள 469 ஆம் இலக்க உறுதி பத்திரப்படி சபரகமுவ அபிவிருத்தி வங்கியில் அடகு வைத்துள்ளதும் கீழே அட்டவணையில் விவரம் அளிக்கப்பட்டுள்ளதுமான சொத்துக்களை கெஸ்பேவ, வலவ்வத்த, தம்மிக்கா இலக்கம் 228/ஏ, எனும் விலாசத்தில் வதியும் அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர் ஏ. எஸ் லியனகே என்பவரால் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என்பதாகும்."

**அட்டவணை**

சபரகமுவ மாகாணத்திலுள்ள இரத்தினபுரி மாவட்டத்தின் நவதுன் கோரளையிலுள்ள மெதபத்து கிரிபத்கலவில் அமைந்துள்ள, சகின்வத்த எனும் பெயருள்ள, வடக்கில் : இலுக்கு தோட்டமும் ; கிழக்கில் : ஓடையும் ; தெற்கில் : ஹாலியின் தோட்டமும் ; மேற்கில் : கல் கட்டிடமும் எல்லைகளாக அமைந்த மூன்று கொத்து குரக்கன் விசாலமான நிலத்தின் ஒரு பகுதிற்காக, அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எம். எஸ். தியகம அவர்களினால் 27.06.2004 ஆந் திகதி வரையப்பட்ட 5491 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் 1 ஆம் இலக்க நில துண்டென விளக்கமளிக்கப்பட்டுள்ள நிலத்துண்டின் எல்லைகளாக வடக்கில் : இலுக்கு தோட்டமும் : கிழக்கில் : சகின்வத்தவும் ; தெற்கில் : ஹாலியின் தோட்டமும், பாதையும் ; மேற்கில் ; ஹாலி யின் தோட்டமும் அமைந்த ஒரு ஏக்கர், இரண்டு றூட், பதினைந்து பேர்ச்சஸ் (01ஏ. 02றூ. 15பே.) நிலத்துண்டும் அதிலுள்ள அனைத்தும் அடங்களாக.

நிர்வாகக்குழுவின் உத்தரவின்படி,

ஏ. பி. ஆரியரத்ன,
பொது முகாமையாளர்.

சபரகமுவ அபிவிருத்தி வங்கி,
இல. 28, பண்டாரநாயக்க மாவத்தை,
இரத்தினபுரி.

3-57

---

**றுஹுன அபிவிருத்தி வங்கி-பெலிஅத்த கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது அதிகாரத்தின்கீழ் றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் நிதிச் சபையினாலும் மத்திய வங்கியினாலும் பிரசுரிக்கப்பட்ட 1998.04.24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப்

பத்திரிகை அறிவித்தலுக்கிணங்க உருவாக்கப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கிக்குச் சாட்டப்பட்ட அதிகாரத்தின்படியும், 2007.11.28 ஆந் திகதி நடாத்தப்பட்ட றுஹுன அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபைக் கூட்டத்திலே கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது :-

"றுஹுன அபிவிருத்தி வங்கியின் பெயரில் பிரசித்திபெற்ற சட்டத்தரணியும், நொத்தாரிசுமான ஏ. ஜீ. விதான பதிரண அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.03.02 ஆந் திகதிய இலக்கம் 5473 எனும் ஈட்டுப்பத்திரத்தின்கீழ் அறவிடவேண்டிய பணம் செலுத்தல் பெலவத்த, கலகம (வடக்கு) நாகுலுகமுவ எனும் முகவரியில் வசிக்கும் ஜயவர்தன விதான பதிரன கேசமின்த ஜயவர்தன என்போரினால் செலுத்தாதுவிடப்பட்டதாகவும், அவ்வீட்டுமுறியின் கீழ் ஆறு இலட்சத்து எண்பத்திமூவாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றொரு ரூபாவுக்கான (ரூ. 6,83,791) பணம் றுஹுன அபிவிருத்தி வங்கிக்குச் செலுத்தவேண்டியிருப்பதாகவும், 2007.07.08 ஆந் திகதியிலிருந்து வருடத்திற்கு 20.5 வீதப்படி ஆறு இலட்சத்து எண்பத்திமூவாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூற்றொரு ரூபா (ரூ. 6,83,791) ஏலவிற்பனைத் திகதியிலிருந்து இன்னும் ஏலவிற்பனைச் செலவும், இதர செலவுகள் இருப்பின் அவற்றைக் குறைத்தும் அப்பணத்தை அறவிட்டுக்கொள்ளும் பொருட்டு மாத்தறை அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளரான ஜீ. பீ. ஆனந்த என்பவரினால் இலக்கம் 7893 என்ற ஈட்டுப்பத்திரத்தின்கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனையவற்றுடன் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்ய இருப்பதாக வங்கியின் பணிப்பாளர் சபை இதில் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்**

***முதலாவது அட்டவணை***

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே தென் கிருவாபத்துவையில் கலகமயில் அமைந்துள்ள பெலவத்தயை எல்லையாகக் கொண்ட வடக்கே : அபேசேகர லியனகே வத்துஹாமி வசிக்கும் தோட்டத்தில் வேலியும் ; கிழக்கே : குடாவெவே அத்மக லுனுவெரனிய பதுரயும், லியன்பதுரயும் ; தெற்கே : கம்மல்வல தெனியயும் ; மேற்கே : உடரடகேவத்த எனும் எல்லைக்குள் குரக்கன் குருனி மூன்று அல்லது குரக்கன் குருனி ஒன்றரை அளவு பரப்புள்ள காணியின் அத்தோடு அதற்கான மரங்கள், பழவர்க்கங்கள் போன்ற அனைத்தும் அடங்கலாக.

***இரண்டாவது அட்டவணை***

தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே தென் கிருவாபத்துவையில் கலகமயில் அமைந்துள்ள பெலவத்த எனும் குரக்கன் குருனி மூன்று அல்லது குரக்கன் ஒன்றரை அளவு இடப்பரப்பு உள்ள காணியை அதிகாரம்பெற்ற நில அளவையாளரான திரு. ஐ. கொடம்பகே என்பவரினால் அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட 2003.06.10 ஆந் திகதிக்குரிய இல. 4945 எனும் வரைபடத்தின் லொட் 1 எனக் காட்டப்பட்ட காணிக்கு எல்லையாக- வடக்கே : விக்ரமகேவத்தயும், பாசல் மாவத்தையும் ; கிழக்கே : பாசல் மாவத்தையும் குடாஅத்மகயும் ; தெற்கே : அத்மகயும் கம்மல்ஆரயும் அல்லது கம்மல்வல தெனியயும் ; மேற்கே : பாவுலவத்தயும் எனும் நாட்புற எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு ஏக்கர் ஒரு றூட் முப்பத்தொன்பது தசம் ஏழு (1ஏ. 1றூ. 39.7பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதற்கான கட்டிடங்கள், மரங்கள், பழவர்க்கங்கள் போன்ற அனைத்தும் அடங்கும்.

இது தங்காலை காணிப்பதிவு அலுவலகத்தில் எப். 248/78 இல் பதியப்பட்டிருக்கும்.



உப படிவம் 1 உம் 2 இல் குறிப்பிட்டபடி ஒரே காணி என்பதுடன், இதை 2005.09.15 ஆந் திகதி திரு. எச். ஏ. அமரசேன என்பவரினால் இல. 7893 க்கான ஒப்பினையில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

பணிப்பாளர் சபை ஆணைப்படி,

எஸ். ஜே. ரத்நாயக்க,
தலைவர்.

றுஹுன அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
பம்புரண,
மாத்தறை.

3-61

---

**செலான் வங்கி ப. வ. க.**

*(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0860-01472229-101 (மில்லேனியம் கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2008.01.17 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால்அறிவிக்கப்படுகின்றது :-

